# கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, 2019ன் படி கடற்கரை மண்டல மேலாண்மை திட்டம் (CZMP) தயாரித்தல்.

வரைவு சுருக்கம்

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றத்துறையால் வெளியிடப்பட்ட கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2019ன் படி, தமிழ்நாட்டிற்கான கடற்கரை மண்டல மேலாண்மை திட்டம் (Coastal Zone Management Plan) தயாரிக்கும் பணி, தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறைக்கு வழங்கப்பட்டது. அதன்படி, நீடித்த கடற்கரை மேலாண்மைக்கான தேசிய மையம் சென்னை (National Centre for Sustainable Coastal Management Chennai) என்ற ஒன்றிய அரசின் ஏற்பு பெற்ற நிறுவனத்திற்கு இத்திட்டத்தினைத் தயாரிக்கும் பணி வழங்கப்பட்டு, தமிழ்நாட்டிற்கான கடற்கரை மண்டல மேலாண்மை வரைவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, 2019 கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கைக்கிணங்க, கடலோர மாவட்டங்களுக்கான வரைவு திட்டத் தயாரிப்பு பணி நிறைவு பெற்று, வழிகாட்டு நெறிகளின் இணைப்பு IV, பத்தி 6 ன் படி, தமிழ்நாட்டிற்கான வரைவு கடற்கரை மண்டல மேலாண்மைத் திட்டம் மற்றும் நிலப்பயன்பாடு வரைப்படம் 1:25000 என்ற உருவளவில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தயாரிக்கப்பட்டு இத்திட்டம் குறித்து அரசுத் துறைகள், தன்னார்வத் தொண்டு நிவனங்கள், உள்ளூர் சமூகங்கள், பொதுமக்கள் அகியோரின் கருத்துகள் அல்லது மாற்றுக் கருத்துகளை அறிய வேண்டி 16.06.2023 அன்று சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் இணையதளம் (http://www.environment.tn.gov.in) மற்றும் இத்துறையின் சுற்றுச்சூழல் தகவல் மையத்தின் இணையதளம் (http://www.tnevis.nic.in) ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டமானது 1:25000 என்ற உருவளவில், கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கை, 2019ன் தற்போது உள்ள நடைமுறை வழிகாட்டுதல்களின்படி தமிழ்நாட்டின் 12 மாவட்டங்களுக்கான கடலோர மண்டல மேலாண்மை திட்ட வரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு அதில் பல்வேறு மண்டலங்கான கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–1 (CRZ–1) (சூழல் நுட்பப் பகுதி), கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–2 (CRZ–II) (வளர்ச்சியடைந்த பகுதி), கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–3 (CRZ–III) (ஊரகப் பகுதி), கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–4 (CRZ–IV) நீர்ப்பகுதிகள்), நிலஅளவைத் தகவல்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

## கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, 2019

**பத்தி 2.0** கடலோரப் பகுதி மற்றும் கடல்நீரைப் பேணும்பொருட்டும், பாதுகாக்கவும் கடற்கரைக் கட்டுப்பாட்டுப் பகுதிகள் கீழ்க்ண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## 2.1. கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–1(CRZ–I)

சுற்றுச்சூழல் அதிநெருக்கடிக்குள்ளாகும் பகுதிகளும், மேலும் பின்வருமாறு செயல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளும் இதில் அடங்கும்.

## 2.1..1 கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–1(அ) (CRZ–IA)

கடற்கரையின் செறிவுத்தன்மையை பேணுவதில், பின்வரும் சூழியல் ஊறுபாட்டுக்குரிய பகுதிகள் மற்றும் புவி உருவியல் கூறுகள் இவ்வகையில் அடங்கும்.

அ) சதுப்பு நிலங்கள் (1000 சதுர மீட்டர் பரப்பளவுக்கு மேல் உள்ள பகுதிகளுக்கு 50மீ இடைவெளி (Buffer) விடப்பட வேண்டும்.

ஆ) பவளப்பாறைகள் மற்றும் அதுதொடர்புடைய உயிரினப் பல்வகைமை
இ) மணல்தேரிகள்
ஈ) உயிரியல் இயக்கமுள்ள, கடலலையின் உச்ச ஏற்றத்தின்போது கடல்நீரால் சூழ்ந்து கொள்ளப்படும் சமதள சதுப்புநிலப்பகுதி
உ) வன உயிரினங்கள் பாதுகாப்புச் சட்டம் , 1972, காடுகள் (பாதுகாப்புச்) சட்டம், 1980 அல்லது சுற்றுச்சூழல் (பாதுகாப்புச்) சட்டம், 1986 ஆகியவற்றின் கீழ் பாதுகாக்கப்பட்ட தேசிய பூங்காக்கள், கடற்பூங்காக்கள், சரணாலயங்கள், காப்புக்காடுகள், வன உயிரினங்கள் வாழுமிடங்கள் மற்றும் பிற பாதுகாக்கப்பட்ட பகுதிகள்.
ஊ) உப்பளங்கள்
எ) கடலாமைகளின் உறைவிடங்கள்
ஏ) நண்டுகள் வாழ்விடம்
ஐ) கடற்புல்பரப்புகள்
ஒ) பறவைகளின் உறைவிடங்கள்
ஓ) தொல்லியல் மற்றும் மரபுசார் பெருமைக்குரிய இடங்கள்

இந்த அறிவிப்பின் இணைப்பில் உள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில், சென்னை, தேசிய நீடித்த கடற்கரை மேலாண்மை மையத்தால் வரையறுக்கப்பட்டவாறு, மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பகுதிகளால் அந்தந்த பகுதிகளில் உள்ள சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளுக்கென ஒரு விரிவான சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் வகுக்கப்பட்டு, கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்படும்.

### 2.1..2 கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–1(ஆ) (CRZ–IB)

அலையிடை மண்டலம், அதாவது தாழ்வலைக்கோடு மற்றும் உயரலைக்கோடு இவற்றிற்கு இடையே உள்ள பகுதி.

### 2.2.கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–2(CRZ–II)

தற்போதுள்ள நகராட்சி எல்லைகளுக்குட்பட்ட பகுதிகள் அல்லது தற்போதுள்ள சட்டப்படி வரையறுக்கப்பட்ட பிற நகர்ப் பகுதிகளுக்குள் உள்ள கடற்கரை வரையிலான அல்லது கடற்கரையை ஒட்டிய பகுதிகள், கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–2ல் அடங்கும். மொத்த மனைகளில் 50%க்கும் அதிகமாக, கணிசமான எண்ணிக்கையில் குடியேற்றப் பகுதிகளை கொண்ட, குடிநீர், வடிகால், அணுகு சாலைகள் போன்ற கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட நகர்ப்பகுதிகள் இவ்வகையில் அடங்கும்.

### 2.3. கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–3(CRZ–III)

அதிக அளவில் வாழிடங்கள் இல்லாத பகுதிகளும், கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–2க்கு உட்படாத ஊரகப்பகுதிகள், இன்ன பிற பகுதிகளும் கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–3ல் அடங்கும். இம்மண்டலம் பின்வருமாறு மேலும் வகைப்படுத்தப்படுகிறது.

### 2.3.1. கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–3 (அ) (CRZ–III –A)

மேற்காணுமாறு மக்கள் தொகை அதிகம்கொண்ட கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–3ன் பகுதிகள், 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில், மக்கள் தொகை ஒரு சதுர கிலோமீட்டருக்கு 2161க்கும் அதிகமாக உள்ள நிலப்பகுதிகள் கடலோர ஒழுங்குமுறை மண்டல்–3 (அ) (CRZ–IIIA) என வகைப்படுத்தப்பட வேண்டும். இந்த அறிவிக்கையின்படி, உரிய ஆலோசனை செயல்முறையைப் பின்பற்றி உருவாக்கப்பட்ட கடற்கரை மண்டல மேலாண்மைத் திட்டம் ஏற்கப்படுமானால், கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–3 (அ) (CRZ–IIIA) யில் அமைந்துள்ள கடற்கரையை ஒட்டிய நிலப்பரப்பில் உயரலைக் கோட்டிலிருந்து 50 மீட்டர் வரை உள்ள பகுதி, கட்டுமானம் தடை செய்யப்பட்ட பகுதி என குறிக்கப் பெறும்; இல்லையெனில் 200 மீட்டர் வரையுள்ள நிலப்பகுதி கட்டுமானம் தடை செய்யப்பட்ட பகுதி என நிலையே தொடரும்.

### 2.3.2 கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–3 (ஆ) (CRZ–III–B)

2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, ஒரு சதுர கிலோமீட்டருக்கு 2161க்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட மற்ற அனைத்து கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–3 பகுதிகளும், கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–3(ஆ)(CRZ–III B) என்ற வகைப்பாட்டில் அடங்கும். இத்தகைய கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–3(ஆ)(CRZ–III B) என்ற வகைப்பாட்டிற்கு உட்படும் நிலப்பரப்பில் உயர் அலை எல்லையிலிருந்து 200 மீட்டர் வரையிலான நிலப்பகுதி கட்டுமானம் தடை செய்யப்பட்ட மண்டலம் என்று குறிக்கப்படும்.

### 2.3.3.

கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–3(CRZ–III)ல் உள்ள அலைத் தாக்கம் உள்ள நீர் நிலைகளை ஒட்டிய, உயரலை எல்லையிலிருந்து 50 மீட்டர் வரை உள்ள நிலப்பகுதி அல்லது நீரோடையின் அகலம் ஆகிய இவற்றில் எது குறைவோ, அப்பகுதியும் (CRZ–III) ல் கட்டுமானத்தடை உள்ள பகுதி எனக் குறிக்கப் பெறும்.

குறிப்பு: அறிவிக்கப்பட்ட துறைமுக எல்லைகளுக்கு உட்பட்ட பகுதிகள் கட்டுமானத் தடை உள்ள பகுதி என்ற வரையறைக்குட்படாது.

### 2.4.கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–4(CRZ–IV)

நீர்ப்பரப்பினை உள்ளடக்கிய கடற்கரைப் பகுதி (CRZ–IV) கீழ்க்காணுமாறு வகைப்படுத்தப்படும்.

### 2.4.1 கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–4(அ) (CRZ–IV A)

தாழ்வலைக் கோட்டிலிருந்து 12 கடல் மைல் வரையிலான நீர்ப்பகுதியும், கடற்படுகைப்பகுதியும் CRZ–IV A என்ற வகைப்பாட்டில் அடங்கும்.

### 2.4.2 கடலோர ஒழுங்குமுறை மண்டலம்–4(ஆ) (CRZ–IVB)

அலைத் தாக்கமுள்ள நீர் நிலை/ஆற்றங்கரையின் தாழ்வலை எல்லையிலிருந்து கரையின் எதிர்த் திசையின் தாழ்வலை எல்லை வரைக்குமான இடைப்பட்ட நீர்ப்பகுதியும், நீர்நிலை கடலில் கலக்கும் முகத்துவாரத்திலிருந்து அலைத்தாக்கம் உள்ள எல்லை வரையிலும் நீளும் பகுதியும்

(வறட்சியான காலத்தில் 5ppt என்ற அளவின் உப்புத்தன்மை உள்ள பகுதிகள்) CRZ–IVB வகையில் அடங்கும்.

## 3.0. கடலோர ஒழுங்குமுறை மண்டலம் (CRZ)ல் சிறப்பு கவனம் தேவைப்படும் பகுதிகள்

இடர்மிகு கடற்கரை சுற்றுச்சூழலைக் காக்கவும், சிரமங்களுக்கு உள்ளாகும் உள்ளூர் சமூகங்களைப் பாதுகாக்கும் நோக்கத்திற்காகவும் பின்வரும் கடலோரப் பகுதிகளின் மீது சிறப்பு கவனம் செலுத்தப்படும்.

## 3.1 சுற்றுச்சூழல் இடர் மிகுந்த பகுதிகளுக்கான கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் (CVCA)

சுற்றுச்சூழல் (பாதுகாப்புச்) சட்டம், 1986ன் கீழ் அடையாளங்காணப்பட்ட, மன்னார் வளைகுடா போன்ற சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் மற்றும் உள்ளூர் சமூகங்கள் எதிர்கொண்டுவரும் இடர்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சிறப்புச் சலுகை தேவைப்படும் பகுதிகள் மற்றும் நிலைத்த வாழ்வாதாரத்திற்காக கடல் வளங்களை சார்ந்திருக்கும் மீனவர்கள் உள்ளிட்ட உள்ளூர் சமூகத்தின் பங்களிப்புடன் நிர்வகிக்கப்படும் பகுதிகள்.

3.2 முதன்மை கடற்கரைப் பகுதியை ஒட்டிய உப்பங்கழித் தீவுகளுக்கான கடலோர ஒழுங்குமுறை மண்டலம்.

எனவே அரசு துறைகள்/ நிறுவனங்கள்/ உள்ளூர் சமூகங்கள்/ தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்துப் பிரிவினரும் கடலோர மண்டல மேலாண்மை வரைவுத் திட்டம் குறித்த தங்களின் ஆலோசனைகள் அல்லது ஆட்சேபணைகள் ஏதேனும் இருப்பின், அவற்றை இத்திட்டம் இணையதளத்தில் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 45 நாட்களுக்குள், அதாவது 04.08.2023க்குள், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுத்து மூலம் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறைக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முகவரி
இயக்குநர்,
சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை,
தரைதளம், பனகல் மாளிகை,
சைதாப்பேட்டை, சென்னை–600 015.

ஓம்./– இயக்குநர்,
சுற்றுச்சூழல் மற்றும்
காலநிலை மாற்றத்துறை